பக்கங்கள்: 08 விலை: 20/=

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆனி 13 சனிக்கிழமை 27.06.2020 | கதிர் 102



## தீவிரமாகும் டெங்கு!

கொழும்பு, ஜூன் 27

பருவமழைக்காரணமாகஅடுத்த சில மாதங்களில் நாட்டுக்குள் டெங்கு நோய் பரவக்கூடும் எனத் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 5 மாதங்களில் கொழும்பு, காலி, இரத்தினபுரி, கண்டி மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த மாவட்டங்களில் 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

2

## கூட்டமைப்பு வேட்பாளர் இப்படியும் பிரசாரம்!



(வசந்தரூபன்)

வவுனியா, ஜூன் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரின் வித்தியாசமான பிரசார உத்தி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் களமிறங்கியுள்ள முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், வித்தியாசமான முறையில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

2

# விஷ நாகங்களின் கூடாரம் தமிழரசுக் கட்சியின் வீடு!

## அருந்தவபாலன் சீற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழரசுக் கட்சியின் வீடு இன்று புற்றெடுத்து விச நாகங்கள் சூழ்ந்து எல்லாமே அழிந்துபோகின்ற நிலையில் ஏனையவர்களை வீட்டுக்குள் கூப்பிடுவது நகைச்சுவையானது.

- இப்படிக் காட்டமாகக் கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் க.அருந்தவபாலன்

2

## போதை தடுப்பு பிரிவில் நால்வர் அதிரடிக் கைது!

கொழும்பு, ஜூன் 27

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த 4 அதிகாரிகள் உள்ளிட்ட 5 பேர், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள், போதைப்பொருள் விநியோகம் மற்றும் கைதான பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தப்பிக்க உதவியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

2

## கட்டுநாயக்க திறப்பதில் தாமதம்!

கொழும்பு, ஜூன் 27

கொரோனா முடக்கத்தின் பின்னர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் அது மேலும் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## யாழ். வந்த சொகுசு பஸ் பாலத்தில் மோதி விபத்து!



ஓமந்தையில் 18 பேர் காயம்

(வசந்தரூபன்)

வவுனியா, ஜூன் 28

வவுனியா, ஓமந்தையில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து

2

## பத்து கிலோ கஞ்சாவுடன் பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூன 28

கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கைது செய்துள்ளனர் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரியே 10 கிலோ கிராம் கேரளாக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கஞ்சாவைக் கடத்த முற்பட்டபோது அநுராதபுரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் சுற்றிவளைப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## இன்னும் 5 ஆண்டுகளை வீணடிக்கவா தேர்தலில் வாக்கு கேட்கின்றார் விக்கி?

### கேள்வி எழுப்புகின்றார் தவராசா




(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர் வைக் காண்பேன் எனக் கூறி மாகாண சபையை ஆட்சி செய்த சி.வீ.விக்னேஸ்வரன் இந்தியாவில் கற்பழிப்பு வழக்கில் தண்டனை பெற்ற பிரேமானந்தா சுவாயின் சகாபாடிகளை விடுதலை செய்ய வலியுறுத்திய தைத் தவிர எதனையும்

2

## கூட்டமைப்பின் தேசியப்பட்டியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகத் தேசியப்பட்டியல் நியமனத்துக்காக வழங்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர் விவரம் வெளியாகியுள்ளது.

1)அம்பிகா சற்குணராசா - சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.

2)கதிர்காமர் வேலாயுதபிள்ளை தவராசா - ஜனாதிபதி சட்டத்தரணி, தமிழரசுக் கட்சி, கொழும்புக் கிளைத் தலைவர்.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சர்ச்சைகளுக்கு மத்தியில் அம்பாறையில் பிரசாரத்தை ஆரம்பித்துவைத்த கருணா!









கொழும்பு, ஜுன் 27

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் மகா சபை சார்பில் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர்ஐக்கியசுதந்திரமுன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் இன்று முற்பகல் கல்முனை அம்பலத்தடி பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைத்த பின்னர் தனது பிரசாரத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நாவிதன்வெளியில் மக்கள் சந்திப்பில் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கிய கருணா பின்னர் தனது பிரசாரப் பணியை முன்னெடுப்பதற்காக அம்பாறைக்குச் சென்றிருந்தார்.

இந்தநிலையில், அவர் தனது பிரசாரத்தை உத்தியோகபூர்வமாக இன்று கல்முனையில் ஆரம்பித்து வைத்தார். அப்பகுதி பொதுமக்கள், இளைஞர்கள் இணைந்து மாலை அணிவித்து ஊர்வலமாக அவரை வீதியில் அழைத்து வந்தனர்.

அத்துடன் வாகனப் பவனி ஒன்றையும் அவருக்கு ஆதரவாக அப்பகுதி இளைஞர்கள் மேற்கொண்டதுடன் பட்டாசுகளையும் கொளுத்தி பாரிய வரவேற்பளித்தனர்.

இதனைத் தொடர்ந்து கல்முனையில் அமைந்துள்ள அம்பலத்தடி பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்ற கருணா பூஜையில் ஈடுபட்ட பின்னர் தனது முதல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

கப்பல் இலச்சினையுடன் கருணாவின் பல துண்டுப்பிரசுரங்கள் கல்முனை நகரப் பகுதி எங்கும் பொது மக்களிடம் வழங்கப்பட்டன.

## கூட்டமைப்பின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3)தம்பிராசாகுருகுலராசா - முன்னாள் வடமாகாணசபைஅமைச்சர், கிளிநொச்சி.

4)சுசிலிப்பிள்ளை சேவியர் குலநாயகம் - இலங்கை தமிழரசுக் கட்சி நிர்வாகச் செயலாளர், யாழ்ப்பாணம்.

5)கிருஷ்ணபிள்ளை சேயோன் - இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணித் தலைவர், மட்டக்களப்பு.

6)மதினி நெல்சன் - மகளிர் அணித் தலைவி, தமிழரசுக்கட்சி, யாழ்ப்பாணம்.

7)குலசேகரம் மகேந்திரன் - தமிழீழ விடுதலை இயக்க உபதலைவர், கல்முனை, அம்பாறை.

8)அன்னம்மா சௌந்தரராசா - நற்பட்டிமுனை, அம்பாறை.

9)தம்பிஜயா மகாசிவம் - முன்னாள் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாணம்.

10)ஆறுமுகம் நடேசு இராஜரெட்ணம் - முன்னாள் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர், யாழ்ப்பாணம்.

11)பொன்னம்பலம் செல்வராசா - சிரேஷ்ட தலைவர் இலங்கைத் தமிழரசுக் கட்சி, மட்டக்களப்பு.

12)கந்தையா தேவராசா - வன்னி.

## விஷ நாகங்களின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்காலத்தில்பலஏமாற்றுக்கதைகளைக் கூறுவது தெரியும். ஒரு வகையில் அந்த வீட்டுக்குள் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவன் என்ற அடிப்படையில் எனக்குக் கூடுதலாகவே தெரியும்.

இப்போதைய பேச்சுக்களை அடிக்கடி மாவை சேனாதிராசா குண்டுகள் போடுவார். அந்த வகையாக ஒரு தேர்தல் குண்டாகவே இப்போதைய பேச்சுக்களையும் கருதுகின்றோம்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொதுவாக மக்கள் வெறுக்க தொடங்கியிருக்கின்றார்கள். அதற்கு ஆதரவளித்த மக்கள் பெரும்பாலும் அதிலிருந்து வெளியேறி மாற்று அணியாக நீதியரசன் விக்னேஸ்வரன் அணியைத் தெரிவு செய்து எங்களுக்கு ஆதரவு பெருகிக்கொண்டிருக்கின்றது.

அவர்களுடைய அந்த வீடு என்பது இன்று புற்றெடுத்து விஷ நாகங்கள் சூழ்ந்து எல்லாமே அழிந்துபோகின்ற ஒரு நிலையில் ஏனையவர்களை அந்த வீட்டுக்கு கூப்பிடுவதென்பது மிகவும் நகைச்சுவையான ஒன்று.

இந்தத் தேர்தலுடன் அவர்கள் அரசியலில் இருந்து அகற்றப்படுவார்கள் என நாங்கள் கருதுகின்றோம் - என்றார்.

## யாழ். வந்த சொகுசு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நோக்கி வந்த சொகுசு பஸ்ஸே அதிகாலை 3.30 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்து ஓமந்தைப் பகுதியில் இருந்த பாலத்துடன் மோதித் தடம்புரண்டு வீழ்ந்தது.

எதிரில் வந்த லொறியுடன் ஏற்படவிருந்த விபத்தைத் தடுப்பதற்கு முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டதாக பஸ் நடத்துனர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஓமந்தைப்பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## இன்னும் 5 ஆண்டு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராசா, இன்னும் ஐந்து வருடங்களை வீணடிக்கவா மக்களிடம் வாக்குகேட்கின்றார்எனவும்கேள்விஎழுப்பியுள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாண சபை தேர்தலின் போது தாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றுவோம் என முழக்கம் இட்டார் விக்னேஸ்வரன். ஆனால் ஒரு இராணுவச்சிப்பாயைக்கூட அவரால்வெளியேற்ற முடியவில்லை. இவர் இதனைத் தான் செய்யவில்லை என்று பார்த்தால் வடக்கு மாகாண சபைக்குக் கிடைத்த பெருமளவான அபிவிருத்தி நிதியை அந்தத் திட்டத்துக்கு தனது உறவினரை நியமிக்கவில்லை என்பதற்காகத் திருப்பி அனுப்பிய அரசியல்வாதிதான் இவர்.

மாகாண சபையை ஆட்சி செய்த போது மக்களுக்கு எதனையும் செய்யாத இவர் இலங்கைக்கு முதல் தடவையாகப் பாரதப்பிரதமர் மோடி வருகை தந்தபோது தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதையும் பேசாது இந்தியாவில் பல பெண்களை சாமியார் என்ற போர்வையில் கற்பழிப்பு செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேமானந்தா என்ற சாமியாரின் சகபாடிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு மகளுக்கு பல ஆண்டுகளாக எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கக் கற்பழிப்பு சாமியாரை விடுவிக்க வலியுறுத்தி மோடிக்குக் கடிதம் கொடுத்தார். இதுதான் மாகாண சபையில் ஆட்சியில் இருக்கும்போது ஆற்றிய பணி. வடக்கு மாகாண சபையில் ஐந்து வருடங்களை வீணடித்துவிட்டு இப்போது மீண்டும் ஐந்து வருடங்களை வீணடிக்கவா தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கின்றார் - என்றார்.

## கூட்டமைப்பு வேட் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளை கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ் மேற்கொள்வதில் பல வேட்பாளர்கள் திண்டாடிப் போயுள்ளனர்.

பெரிய பொதுக்கூட்டங்கள் நடத்தக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ள நிலையில், தனது பிரதேசத்தில் லிங்கநாதன் வித்தியாசமான உத்தியைக் கையாள்கிறார்.

நெடுங்கேணிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் விற்கப்படும் குளிர்பான வகைகள் உள்ளிட்ட பல உணவுப்பொதிகளில் தனது ஸ்ரிக்கர் ஒட்டி விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளார்.

குளிர்பானப் போத்தல்கள் மற்றும் பானங்களில் லிங்கநாதனின் படம் பொறித்த புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

## போதை தடுப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் எப்படி போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவினார்கள் என்பது குறித்து கடந்த சில தினங்களாகச் சிங்கள ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், அவர்களிடம் தொடர்ந்து வாக்குமூலம் பெற்று வந்த நிலையில், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடனான தொடர்பின் மூலம் அவர்கள் 3 கோடி 11இலட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தை ஈட்டியிருந்தமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நிலம், கார், மோட்டார் சைக்கிள்கள், பணம் ஆகியவற்றை அவர்கள் பெற்றுள்ளனர்.

பிலியந்தலையில் சில வருடங்களின் முன்னர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு அதிகாரி கொல்லப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துக்கும் கைதானவர்களுக்கும் ஏதாவது தொடர்புள்ளதா என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## தீவிரமாகும் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் 11 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் கடந்த ஜனவரி மாதம் அடையாளம் காணப்பட்டனர்.

எனினும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் அருண ஜயசேகர குறிப்பிட்டார்.

# பாடசாலையை உடைத்து திருட்டு!

வவுனியா, ஜுன் 27

வவுனியா நகரில் அமைந்துள்ள இலங்கைத்திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் திருட்டுச் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்தப் பாடசாலைக்குள் நேற்று உள்நுழைந்த இனம்தெரியாத நபர்கள் பாடசாலையின் கூட்டுறவு அலுவலகத்தை உடைத்து அங்கிருந்த பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

திருட்டுச் சம்பவத்தில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக அறிந்த பாடசாலையின் முதல்வர் வவுனியா பொலிஸாருக்கு தெரிவித்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கட்டுநாயக்க திறப்பதில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க இந்தத் தகவலை தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையை பாதுகாப்பதற்காகவும், சுற்றுலாத்துறையினர் மூலம் நாட்டு மக்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கும் வேறு வழிமுறைகளைப் பயன்படுத்த உள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில், ஓகஸ்ட் 15ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரே விமான நிலையம் திறக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேவை: சுமந்திரனின் விளக்கம்

இந்தப் பொதுத் தேர்தல் சமயத்தில் வடக்கு அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய நபராக மாறியிருப்பவர் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்தான்.

எதிரணிக் கட்சிகளால் மட்டுமல்லர், அவர் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டின் பிற அங்கத்துவக் கட்சிகளினால் மட்டுமல்லர், தமது தமிழரசுக் கட்சியினராலேயே அதிகம் இலக்கு - குறி - வைத்துத் தாக்கப்படுபவர் அவர்தான்.

அவரை வீழ்த்தி விட வேண்டும் என்று இன்று கங்கணம் கட்டி நிற்போர் அதிகம். நேற்று வரை அவர் அருகில் நின்றோர் - அவரின் கடைக்கண் பார்வை கிட்டியமையால் பதவி நிலையில் உயர்ந்தோர் - எல்லோராலுமே குறி வைத்துத் தாக்கப்படுகின்றார் அவர்.

இந்தக் கூட்டுக் கட்சிக்காரர்கள் பலரில் இருந்தும் வேறுபடுபவர் அவர். அது ஒரேயொரு விடயம்தான்.

1980கள் முதல் 2010 வரை சுமார் முப்பது ஆண்டு காலம் தமிழர் மத்தியில் அசைக்க முடியாத பலம் பொருந்திய அரசியல், இராணுவ, சமூக சக்தியாக வியாபித்தவர்கள் விடுதலைப் புலிகள். அந்தப் போராளிகளின் காலத்தில் அவர்களை எதிர்த்தவர்களும், அவர்களுக்கு எதிராக அழிவு வேலை செய்தவர்களும், புலிகளை ஆதரித்து நின்றவர்களும் இன்று புலிப் புராணம் பாடி அரசியல் செய்யும் போது அதைச் செய்யாதவர் சுமந்திரன் ஒருவரே. அதற்காக புலி எதிர்ப்புப் புராணமும் அவர் பாடுகின்றார் என்றும் அர்த்தம் இல்லை

"ஆயுதம் ஏந்திப் போராடாத நான் அதனைச் சொல்லி வாக்கைப் பெறுவது அவர்களது தியாகத்தையும் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் செயல்" என்று நேற்று வடமராட்சி நெல்லியடி மாலுசந்திப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுப்படுத்தல் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

சுமந்திரன் சொல்வது போல ஆயுதப் போராட்டம் முடிந்து விட்டது. இனி அகிம்சை வழியில், மாற்று மார்க்கத்தில்தான் நாம் போராட வேண்டும் என்பதுதான் யதார்த்த நிலைமை. ஆனாலும் அதனை ஒட்டி தமிழர் சமூகத்துக்குக் கேள்விகள் பலவுண்டு.

சரியோ, பிழையோ ஆயுதப் போராட்ட வழிக்கு எமது உரிமைக் கோரிக்கை திரும்ப முன்னர் - 1980 கள் வரை - நாம் அகிம்சை வழியில், சாத்வீக நெறியில், காந்தீய மார்க்கத்தில், போராடியபோது எமது போராட்டக்குரல் இந்தியா வரைதான் கேட்டது. அதைத் தாண்டிச் செல்லவில்லை.

விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் கனன்ற போது - பீரங்கிகள் முழங்கிய போது - வெடிகுண்டுகள் அதிர்ந்த போது - தமிழரின் உரிமைக் கோரிக்கை உலகம் முழுவதும் கேட்டது. ஐ.நா. வரை எதிரொலித்தது. சர்வதேசத்தன் முழுக் கவனமும் எம் மீது இருந்தது.

ஆயுதப் போராட்டம் இழப்புகளை தந்தது. வலியை ஏற்படுத்தியது. மீள முடியாத பாதிப்புக்களை உருவாக்கியது. தாங்க முடியாத சோகங்களையும், சொல்லொணாத் துன்ப துயரங்களையும் சுமக்க வைத்தது என்பது உண்மைதான்.இவற்றுக்கு அப்பாலும் சில விடயங்களை அது ஏற்படுத்தியது.

இந்த இலங்கைத் தீவில் தமிழர்கள் தனியான சுதேசிய இனம், அவர்களுக்கு இங்கு தொடர்ந்தேச்சையாக வாழிடத் தாயகம் உண்டு, அந்த இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற முக்கிய அடிப்படைக் கோட்பாட்டுகளை பௌத்த, சிங்கள மேலாண்மை அரசுகள் திம்பு வரை நிராகரித்தன. ஆனால் -

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதையும், வடக்கும், கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும், சர்வதேச மட்டத்தில் இலங்கை ஒப்புக் கொண்டது.

15 ஆண்டுகள் கழித்து 2002 டிசெம்பரில் ஒஸ்லோ அறிக்கையை சர்வதேச அரங்கில் ஒப்புக் கொண்டமை மூலம் தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தது சிங்கள அரசு.

இவ்வாறு தமிழர்களின் பிரதான அடிப்படைக் கோரிக்கைகளான, தனியான இனம், தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றை சிங்கள அரசுகள் அங்கீகரிக்கச் செய்யும் அளவுக்கு - அடி பணிய வைக்கும் மட்டத்துக்கு - அதிர்வுள்ளதாக மாற்றியது ஆயுதப் போராட்டம்தான்.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியமை போன்று இந்த மூன்றையுமே அடியோடு மறுதலித்து நிற்கின்றது சிங்களம்.

ஆயுத மார்க்கத்தைத் துறந்து, அகிம்சை வழியிலே சிங்களத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கு சுமந்திரன் காட்டும் பாதை - தந்திரோபாயம் - உத்தி - யாது?

வெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு மூலம் அதைச் செய்து விட முடியுமா?

ஜனநாயகப் பாதையிலே, தமிழ் மக்களை வழிநடத்த விரும்புத் சுமந்திரன் போன்றோரின் தலைமை நாடாளுமன்றத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடிய இடங்களை மட்டும் வைத்துக் கொண்டு இந்தப் போராட்டத்தை அதிர்வுள்ளதாக முன்னெடுக்க முடியும் என்று நம்புகின்றதா?

அல்லது ஜனநாயக வழியிலே இந்தப் போராட்டத்தை இன்னும் தீவிரமாக, உறுதியாக, பயனுள்ளதாக, அதிக அதிர்வுள்ளதாக, சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்கச் செய்யக் கூடியதாக வழி நடத்தும் திட்டம் ஏதும் அவர்களிடம் உண்டா? அதற்கான அர்ப்பணிப்பும், திடசங்கற்பமும், பற்றுறுதியும், தம்மையே தியாகம் செய்யக் கூடிய ஈகத் தலைமையும் அத்தரப்பில் இருக்கின்றதா?

ஒரு தடவை மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் நல்லது.

# சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளை வெல்லக் கூடியோரைத் தெரிவு செய்வோம்!

## முன்னாள் எம்.பி அப்துல்லா மஃறூப் கிண்ணியாவில் வற்புறுத்து

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா,ஜுன்27

சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை பறிக்க விடக்கூடாது. நாம் உரிமைகளோடும் தன்மானத்தோடும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். இதற்காக நமக்காக ஓங்கி ஒலிக்கக் கூடிய குரல்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என முன்னால் பிரதிய மைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கிண்ணியா அண்ணல் நகர் பகுதியில் இன்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு பேசுகையில் –

நமது சமூகம் அச்சுறுத்தப்படுகிறது. இதனால் தெற்கில் வாக்குகளை பெற முடியாது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் மூதூர் தொகுதி மக்கள் தெளிவாக வாக்களித்து ஒன்றுபட்டுள்ளார்கள் .

சந்திரிகா அம்மையார் 63 வீதமான அதிகூடிய வாக்குகளை ஜனாதிபதி தேர்தலில் பெற்றுள்ளார். தற்போதைய ஜனாதிபதி பெற்ற 52 வீதமான வாக்கு வீதம் விகிதாசார முறையில் 225 உறுப்பினர்களில் 115ஆசனங்களை மட்டுமே கொண்டதாக உள்ளது.

இப்படியாக இருக்க 19 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய சிலர் மஹிந்த அணியில் நின்று கொண்டு அதனை இல்லாமல் ஆக்க வேண்டும் என முயற்சிக்கிறார்கள். சிறுபான்மை சமூகத்தின் உரிமை பாதுகாப்பு தொடர்பில் பேசப்பட்ட திருத்தமே இதுவாகும். ஏழுக்கும் மேற்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்காக இதன் மூலம் உருவாக்கப்பட்டன.

மற்றவர்களின் தலையீடு இருக்க முடியாது என்றிருந்த போதும் தேர்தல் ஆணைக் குழுவில் அங்கம் வகிக்கும் ரட்ண ஜீவன்ஹூல் அவர்களை மரண தண்டனை வழங்குவது போன்று தூற்றுகிறார்கள். இவ்வாறு இருக்க தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சமூக வாக்குகளால் எவ்வாறு பெரும்பான்மை ஆசனத்தை பெற முடியும்?

விகிதாசார முறை மூலமாக திருகோணமலையில் மூன்று உறுப்பினர்களும் ஒன்று போனஸ் ஆசனமாகும். கொழும்பில் 19 உறுப்பினர்களுக்கு ஒன்று போனஸ் ஆகும். இப்படியாக விகிதாசார முறை சிறுபான்மை சமூகத்துக்கு தங்களது பிரதிநிதிகளை பெற்றுக் கொள்வதில் சாதகமாகவுள்ளது .

எம்மை அச்சுறுத்தியும் வாக்குகளை சிதறடிக்கவும் சில கோடாரிக் காம்புகளை தேர்தலில் களமிறக்கியுள்ளார்கள். வாக்குகளை சூறையாடும் இழி செயலும் அரங்கேற்றப்படுகிறது.

தேவையற்ற இராணுவ் முகாம்களால் மக்களை பீதியில் ஆழ்த்தும் வேலையும் நடக்கின்றது. கிண்ணியா சூரங்கல்,உப்பாறு,யான் ஓயா போன்ற இடங்களில் முகாம்கள் தேவையற்றவை.

கடந்த தேர்தலின் போது மூதூர் தொகுதியில் 91 வீதமான வாக்குகளை சஜீத்துக்கும் 4,900 வாக்குகளையே கோட்டாவுக்கும் அளித்து தெளிவாக செயற்பட்டார்கள் எமது மக்கள்.

ஓகஸ்ட் நடைபெறவுள்ள தேர்தலில் சரியான முடிவுகளை எடுத்து நமது பலம் மிக்க வாக்குகளை கொண்டு உரிமையோடு நாடாளுமன்றத்தில் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்வதனால் முஸ்லிம் சமூக தலைமைகள் பாதுகாக்கப்படும். ரிஷாத் போன்றவர்களின் குரல்களும் பாதுகாக்கப்படும். சம்மந்தமில்லாமல் ஏப்ரல் 21 தாக்குதலோடு – ஒரு நாள் தோன்றி ஒரு நாள் மறைந்த தற்கொலை குண்டுதாரி சஹ்ரானோடு – அவரது குடும்பத்தையும் அவரையும் தொடர்புபடுத்தி அப்பட்டமான குற்றங்களைச் சுமத்தியுள்ளார்கள்

இதனை ஜனாதிபதிஆணைக்குழு, நாடாளுமன்ற சபாநாயகர், இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட பல தரப்புகள் தீர்ப்புக் கூறி குற்றமற்றவர் என நிரூபித்தும் கூட மீண்டும் பழி தீர்க்கச் செயற்படுகிறார்கள். முஸ்லிம்,சிங்கள சகோதரர்கள் இடையில் இனக் கலவரத்தை உருவாக்க நினைக்கிறார்கள்.

கொரோனா நோயை முஸ்லிம்கள் தான் பரப்பினர் எனவும் குற்றம் சுமத்துகிறார்கள். ஜனாஸாக்களை எரித்தார்கள். இப்படிப் பல மன வேதனைகளை எம் மீது திணித்தார்கள். சமூகத்தை அசிங்கப்படுத்தும் செயலாக இப்படி எல்லாம் ஒட்டு மொத்தமாக எம்மை நோக்கிய அம்புகளை மீண்டும் எறிகிறார்கள்.

இதனுடன் இணைந்து ஆளுந்தரப்போடு ஐக்கிய தேசிய கட்சியினர் 'டீல்' வைத்து யானையில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தொல் பொருள் என்கின்ற போர்வையில் அம்பாறை தொடக்கம் திருகோணமலை வரை காணிகளை அபகரிக்க முற்படுகிறார்கள். அம்பாறையில் 43வீதம்,திருகோணமலை 44வீதம் ,மட்டக்களப்பு 25 வீதம் என முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். ஒட்டு மொத்தமாக கிழக்கில் நூற்றுக்கு 85 வீதமான சிறுபான்மை இன மக்கள் வாழ்ந்து வருகிற நிலையில் தொல்பொருள் என்கின்ற போர்வையில் 11பேர் கொண்ட குழுவினை அமைத்து அதில் எந்த வித சிறுபான்மையுமல்லாமல் செயற்படுவதும் ஒரு வகை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. – என்றார்.

# மூன்றிலிரண்டு பலத்தை நிச்சயம் பெறும் 'மொட்டு'

## மஹிந்தவின் சகா ரத்நாயக்க கூறுகின்றார்

நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை நிச்சயம் பெறும் என்று நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்தார்.

பூண்டுலோயா கலப்பிட்டிய பகுதியில் இன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது. அதேபோல் தேர்தல் களமும் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், தேர்தல் சட்டமும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்தே கூடுதலான உறுப்பினர்கள் இம்முறை நாடாளுமன்றம் செல்லவுள்ளனர். எனவே நாம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை நிச்சயம் பெறுவோம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசு சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது.

தற்போது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

எனவே, யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துள்ளனர் - என்றார்.

# கொரோனாவால் இறந்தவரை தூக்கிச் சென்றது ஜே.சி.பி.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் கொரோனாவால் இறந்தவரின் உடலை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் மயானத்துக்குக் கொண்டு சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம் பலசா நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. கொரோனா வைரசால் இறந்த 70 வயது முதியவரின் உடலை நகராட்சி ஊழியர்கள் ஜே.சி.பி. இயந்திரத்தில் எடுத்துச் சென்றனர். வீட்டில் இருந்து உடலை ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் உடலை சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் காணொலிப் பதிவு வெளியாகி அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடல்கள் மூலம் மற்றவர்களுக்குக் கொரோனா பரவும் அபாயம் இருப்பதால், உடல்கள் மிகுந்த கவனத்துடனும் பாதுகாப்புடனும் அடக்கம் செய்யப்படுகின்றன.

இதற்காக வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒரு சில இடங்களில் இந்த விதிமுறைகளைப் பின்பற்றாமல், கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்கின்றனர். கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை மரியாதைக்குறைவாகக் கையாள்வது வேதனை அளிப்பதாக இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீனவை விட்டு விட்டு எங்களுடன் சண்டையிடுகிறார் பிரதமர் மோடி!



சீனாவுடன் சண்டையிடுவார் என்று பார்த்தால் எங்களுடன் சண்டையிடுகிறார் மோடி என்று இந்தியப் பிரதமர் மோடியைக் காங்கிரஸ் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா," பிரதமர் மோடி சீனாவுடன் சண்டையிட்டு இழந்த பகுதிகளை மீட்பார் என்று பார்த்தால், அவர் காங்கிரஸுடன் சண்டையிடுகிறார் பா.ஜ.க. ஒவ்வொரு நாளும் ஆதாரமில்லாத புதுப்புதுக் குற்றச்சாட்டுகளைக் காங்கிரஸை நோக்கிக் கூறிக்கொண்டே இருக்கிறது - என்று தெரிவித்தார்.

எல்லையில் ஏற்பட்ட கைகலப்பில் இந்தியச் சிப்பாய்கள் 20பேர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து சீன விவகாரத்தை முன்வைத்து பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் இடையே வார்த்தைப் போர் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரபலங்கள் கண்டனக் கீச்சுகள்!

சாத்தான்குளத்தில் தந்தை, மகன் சாவைக் கண்டித்துப் பிரபலங்கள் பலரும் தமது கீச்சகப் பக்கத்தில் பதிவுகளை இட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்த காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி, பொலிஸ் மிருகத்தனம் கொடூரமான குற்றம், அவர்கள் அடக்குமுறையாளர்களாவது துயர்மிகுந்தது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு எனது இரங்கலைத் தெரிவித்து கொள்வதோடு, ஜெயராஜ், பெனிக்ஸ் இறப்புக்கு நீதி கிடைக்க அரசிடம் கோருகிறேன் என்று தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

தமிழ்நாட்டில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸின் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் குறித்துக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தேன். இதற்கு எதிராக நாம் குரல் எழுப்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நீதி வழங்கப்பட வேண்டும்,' என்று இந்தியக் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகர் தவான் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

'காவலர்களே கொலை செய்தால் யாரை அழைப்பது' என்று இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா பதிவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்காமல், மிகக் கொடூரமாக நிகழ்த்தப்பட்டிருக்கும் சாத்தான்குளம் தந்தை, மகன் படுகொலைக்கு அவர்களின் உடல் நலக்குறைபாடு தான் காரணம் என்று அறிக்கை விடுத்து, படுகொலைக்கு காரணமான பொலிஸாரைக் காப்பாற்றத் துணியும் தமிழக அரசே, நீங்கள் தான் மக்களின் அரசா?" என்று கீச்சகத்தில் எழுதியுள்ளார் இயக்குநர் பா. ரஞ்சித்.



# ஆக்கிரமிப்பை எப்படி அகற்றுவார் மோடி?

## ப.சிதம்பரம் கேள்வி

எல்லையில் சீன ஆக்கிரமிப்பை எப்படி, எப்பொழுது மோடி அரசு அகற்றப்போகிறது என்ற கேள்விக்கு ஏன் இதுவரை பதில் இல்லை? என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பி உள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

2005 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி அறக்கட்டளை அந்தமான் தீவுகளில் சுனாமி நிவாரணப் பணிகளுக்காகப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ.20 லட்சம் பெற்றது. 2005 நிவாரணப் பணிக்கும் 2020 சீன ஆக்கிரமிப்புக்கும் என்ன தொடர்பு? முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் பா.ஜ.க. முடிச்சுப் போடுகிறது! சீன ஆக்கிரமிப்பை எப்படி, எப்பொழுது மோடி அரசு அகற்றப்போகிறது என்ற கேள்விக்கு ஏன் இதுவரை பதில் இல்லை? - என்றார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கு பணம் வழங்கியதாகவும், பொதுமக்களுக்கான நிவாரண நிதியைக் குடும்ப அறக்கட்டளைக்குத் திருப்பி விடுவது பெரிய மோசடி என்றும் பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா குற்றம் சாட்டியிருந்த நிலையிலேயே சிதம்பரம் இவ்வாறு கேள்வி யெழுப்பினார்.

# உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்

## சீதாராம் யெச்சூரி வலியுறுத்தல்

சாத்தான்குளத்தில் பொலிஸ் காவலில் தந்தை, மகன் இறந்த விவகாரம் குறித்து மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி கடும் கண்டனம் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது 302 பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அவர்கள் இருவரும் கொடூரமான முறையில் அடிக்கப்பட்டதன் விளைவாகவே இறந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இது குறித்து ஓர் உயர்மட்ட அளவிலான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றார்.

# பொலிஸாருக்கு எதிரான போராட்டங்கள் தவறு!

## எச். ராஜா தெரிவிப்பு



பொலிஸாருக்கு எதிரான போராட்டங்கள் வெகுஜன விரோத போராட்டமாகவே கருதப்படும் எனப் பா.ஜ.க.வின் தேசியச் செயலர் எச். ராஜா தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். சாத்தான்குளத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அடுத்தடுத்து இறந்த தந்தை, மகன் விவகாரத்துக்கு நீதிகோரி முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்கள் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் காவலில் நடந்த இறப்பு கண்டிக்கத்தக்கது. தமிழக அரசு உடனடியாக 4 பொலிஸாரையும் இடைநீக்கம் செய்துள்ளது. இதற்கான விசாரணை நடந்து வருகிறது. அதன் அடிப்படையில் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஒரு பொலிஸ் நிலையத்தில் 4 பேர் செய்த குற்றத்துக்கு முழுப்பொலிஸாரையும் கண்டனத்துக்கு உள்ளாக்குவது முறையல்ல. சீனக் கொரோனா விற்கு எதிரான போரில் பொலிஸார் அரும் பணியாற்றி வருகின்றனர். இந்த நேரத்தில் அவர்களுக்கு எதிரான எந்தவித போராட்டமும் வெகுஜன விரோத போராட்டமாகவே கருதப்படும். காவலர் வில்சன் படுகொலையைக் கண்டித்து போராடாது வர்த்தக சங்கங்கள் இன்று போராடுவது ஏன்? இந்த வர்த்தக சங்கங்களை இயக்கும் தீய சக்திகள் எவை. இந்தச் சம்பவத்தை அமெரிக்கக் கறுப்பினத்தவர் சம்பவத்துடன் ஒப்பிட்டு சிலர் பேசுவது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றார்.

# 100 வயதைத் தாண்டிய ஒருவர் கொரோனாவிடமிருந்து தப்பினார்



ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் 114 வயதான அபா திலாகுன் வோர்டேமிக்கேல் என்ற முதியவர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மீண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று முதியவர்களைத்தான் அதிகமாகத் தாக்குகிறது ஆனால் அதிலும் சில அதிசயங்கள் நடக்கத்தான் செய்கின்றன. அபா திலாகுன் வோர்டேமிக்கேல் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையில், தலைநகர் அடீஸ் அபாபா நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்னதாகவே அவருக்குச் சிகிச்சை அளிக்கத்தொடங்கிவிட்டனர். ஒரு கட்டத்தில் அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. உடனே அவருக்கு ஒட்சிசன் செலுத்தப்பட்டது. தொடர்ந்து அவர் குணம் அடைந்துள்ளார். 14 நாள்களுக்குப் பிறகு இப்போது அவர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவர் கொரோனாவையும் சந்தித்து மீண்டிருப்பது அங்கு அதிசயமாகப் பார்க்கப்படுகிறது.

# சர்ச்சையில் சிக்கினார் ஐ.நா அதிகாரி ஒருவர்!

ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் அதன் அதிகாரி உடலுறுவு வைத்துக் கொள்ளும் காணொலி பரவியதை அடுத்து, அது குறித்து விசாரிப்பதற்கு ஐ.நா சபை விசாரணையை முடுக்கிவிட்டுள்ளது.

இந்தச் சம்பவமானது இஸ்ரேலில் நடந்துள்ளது. இது தொடர்பாகப் பேசிய ஐ.நா சபையின் செய்தித் தொடர்பாளர் டுஜாரிக், நாம் எதற்காகப் பேசுகிறோமோ, எதற்காகப் பணியாற்றுகிறோமோ, அவை அனைத்திற்கும் எதிரானது இது போன்ற செயல் என்று கூறி உள்ளார்.

இது இருவர் சம்மதத்துடன் நடந்த உடலுறவா அல்லது பணம் பரிமாறப்பட்டதா? என்ற கேள்விக்கு, இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

# ஜோ பிடன் முன்னிலை!



அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கிறது.

இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் போட்டியிடுகிறார்.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளுக்கும் ஆதரவளிக்காத தொங்கு மகணங்களாக அறியப்படும் அரிசோனா, புளோரிடா, மிச்சிகன், வடக்குக் கரோலினா, பென் சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் ஆகிய மாகாணங்களில் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிக்கை மற்றும் சியானா கல்லூரி ஆகியன தேர்தல் குறித்துக் கருத்துக் கணிப்பு நடத்தின.

இதில் மேற்கூறிய 6 மாகாணங்களிலும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் முன்னிலையில் உள்ளார். ஒவ்வொரு மாகாணங்களிலும் ஜோ பிடன், ட்ரம்பை விட 6 புள்ளிகளுக்கும் மேல் பெற்று முன்னிலையில் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புடின் முன்னிலையில் சிப்பாய் ஆக்ரோஷம்!

## உலகப் போர் வெற்றி விழாவில் சம்பவம்

ரஷ்ய அதிபர் புடின் முன்னிலையில் பாதுகாப்புப் படையினரின் கார் கண்ணாடியைத் துப்பாக்கியால் ஆக்ரோமாக உடைத்தார் இராணுவச் சிப்பாய் ஒருவர். அவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்.

இரண்டாம் உலகப்போர் முடிந்து 75 ஆண்டுகள் ஆனதை நினைவு கூரும் விதமாக நடந்த விழாவின் போது நடந்துள்ளது இந்தச் சம்பவம். இது குறித்த காணொலி ஒன்று வெளியாகியுள்ளது. ரஷ்ய அதிபர் புடின் கலந்துகொண்ட அந்த நிகழ்ச்சியின்போது நடந்த இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தீவிரவாதத் தாக்குதல் ஒன்றை முறியடித்துள்ளதாக ரஷ்யத் தரப்பு இந்தச் சம்பவத்தை விவரித்துள்ளது.



அந்தக் காணொலியில் அமைதியாக நடந்துவரும் நிகிதா ஈரோஜன்கோ (வயது 22) என்ற இராணுவச் சிப்பாய், யாரும் எதிர்பாராத நேரத்தில் திடீரென பாதுகாப்புப் படையினரின் கார்க் கண்ணாடியைத்தன்னுடையகையிலிருக்கும் இயந்திரத் துப்பாக்கியால் உடைக்க முயல்கிறார்.

சுமார் 500 அடி தூரத்தில் புடின் அமர்ந்திருக்க, சட்டென அங்கு வரும் மற்றைய அதிகாரிகள் அந்தச் சிப்பாயை மடக்கிப் பிடிக்கின்றனர். தன்னை அதிபர் முன்பாக இராணுவ மரியாதை செலுத்த அனுமதிக்காததால் கோபத்தில் அவர் இப்படிச் செய்ததாகச் சில செய்திகள் கூறுகின்றன.

# சிலைகளைச் சேதப்படுத்தினால் நீண்டகாலச் சிறைத் தண்டனை

## உத்தரவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்



அமெரிக்காவில் நிறுவப்பட்டுள்ள தலைவர்களின் சிலைகளைச் சேதப்படுத்துவோருக்கு நீண்டகாலம் சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்ட உத்தரவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

ஜோர்ஜ் ஃபிளாய்ட்டுக்கு நீதி கோரித் தொடரும் போராட்டங்களின் ஒரு பகுதியாகத் நகரங்களில் நிறுவப்பட்டுள்ள காலணித்துவ, அடிமை வர்த்தகர்களின் சிலைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், அமெரிக்காவில் நினைவுச்சின்னங்கள் மற்றும் சிலைகளை வன்முறைகளில் இருந்து பாதுகாக்கும் வகையிலான நிர்வாக உத்தரவில் அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். இதன்மூலம், தேசத்துக்கு எதிரான சட்டவிரோதச் செயல்களுக்கு நீண்டகால சிறைத்தண்டனை வழங்கப்படும் என ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். ஆனால் இந்த நிர்வாக உத்தரவு தொடர்பான விவரங்களை வெள்ளை மாளிகை இன்னும் வெளியிடவில்லை.

# சீன அதிகாரிகளுக்கு நுழைவுக் கட்டுப்பாடு




சீனாவின் கொம்யூனிசக் கட்சி அதிகாரிகளுக்கு அமெரிக்கா புதிய நுழைவிசைவுக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்விவகாரத்தில்சீனாஎடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாகவே அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளதாக நம்பப்படுகிறது. சீன அரசின் இப்போதைய மற்றும் முன்னாள் அதிகாரிகளுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்துமென அமெரிக்கா கூறி உள்ளது. ஹொங்கொங்கின் சுயாட்சிக்குக் கேடு விளைவிக்கும் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றும் சீனாவை அமெரிக்கா நிச்சயம் தண்டிக்கும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்து இருந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மைக் பாம்பியோ தெரிவித்தார். அமெரிக்காவின் இந்த முடிவு தவறானது. அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று சீனா கூறியுள்ளது.

# வரலாறு காணாத நன்கொடை!

அமெரிக்கக் கறுப்பினத்தவர் ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டதைத்தொடர்ந்து அங்கே போராட்டங்கள் நடந்து வந்த சூழலில் பெரியளவிலான நன் கொடை அறிவிப்பு ஒன்றை விடுத்துள் ளது 'நெட்ஃபிளிக்ஸ்' நிறுவனம்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ரீட் ஹேஸ்டிங்ஸ் உள்ளிட்ட ஐந்து பேரால் 1997ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இணையத் திரை நிறுவனமான 'நெட்ஃபிளிக்ஸ்' நிறுவனர்களில் ஒருவரும் அதன் தற்போதைய தலைமைச் செயல் அதிகாரியுமான ரீட் ஹேஸ்டிங்ஸ் மற்றும் அவரது மனைவி பாட்டி குயிலின் ஆகியோர் '120 மில்லியன் டொலர்கள் நன்கொடை அளிப்பதாக அறிவித்தனர். இந்த நன்கொடையானது கறுப்பின மக்கள் அதிகமும் பயிலும் ஸ்பெல்மேன் கல்லூரி, மோர்ஹவுஸ் கல்லூரி மற்றும் யுனைடெட் நீக்ரோ கல்லூரி உள்ளிட்ட மூன்று கல்லூரிகளுக்கு இடையே தலா 40 மில்லியன் டொலர்கள் வீதம் பகிர்ந்து அளிப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் ரீட் ஹேஸ்டிங்ஸ் இதை அறிவிக்கும்போது 'பல கறுப்பினர் மாணவர்கள் தங்களது கனவுகளை வென்றெடுக்க இந்த நன்கொடை உதவும் என்று நம்புகிறேன்' என்று தெரிவித்துள்ளார். 'நெட்ஃபிளிக்ஸ் கொடுத்திருக்கும் மிகப் பெரிய அறக்கொடை இது' என அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.







# கேப்பாப்புலவில் தனிமைப்படுத்தப்பட்ட கடற்படையினர் 222 பேரும் விடுவிப்பு

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைபடுத்தலை நிறைவு செய்த 222 கடற்படை யினர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

கொரேனா வைரஸ் தொற்றுத் தாக்கத்தினை தொடர்ந்து வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 250 கடற்படையினர் கேப்பாபிலவு விமானப்படைத் தளத்தில் கடந்த 40 நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களின் 222 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 27 பேர் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். 223 கடற்படையினரிடம் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.

இந்நிலையில் எஞ்சிய 222 பேரும் கடற்படைக்குச் சொந்தமான 5 பஸ்களில் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களை அனுப்பிவைக்கும் நிகழ்வு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கேப்பாபிலவு விமானப்படைத்தளபதி குரூப் கப்டன் என்.ஏ.விஜயசிறீவர்த்தன தனிமைப்படுத்தலை நிறைவு செய்த கடற்படையினருக்கான சான்றிதழை வழங்கிவைத்தார். கடற்படையினரும் விமானப் படையினருக்கும் விமானப்படை மருத்துவ பிரிவிற்கு நினைவுச்சின்னங்களையும் வழங்கிவைத்துள்ளார்கள்

# நல்லாட்சியில் அரச வங்கிகளில் இடம்பெற்ற நிதி மோசடியை ஆராய்வதற்கு ஆணைக்குழு

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

கடந்த ஆட்சிக் காலத்தில் அரச வங்கிகளின் இடம்பெற்ற நிதி மோசடிகள் குறித்து ஆராய்வதற்காக, ஆணைக்குழு ஒன்றை விரைவில் நிறுவ உள்ளதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கி சேவையாளர் சங்கத்தினர் அலரி மாளிகையில் நேற்று பிரதமரைச் சந்தித்துள்ளனர்.

இதன்போது, அவர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரச வங்கிகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் ஓய்வுபெறும்போது, ஓய்வூதியம் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் குழு ஒன்றின் மூலம் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார்.

# மரக்கறி லொறிக்காரர்களிடம் கப்பம்: வசமாகச் சிக்கியவர்களுக்குப் பிணை

கொழும்பு, ஜூன் 27

மரக்கறி லொறிக்காரர்களிடம் கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 05 பேரும், சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நேற்று புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே, இப்பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 14ஆம் திகதி மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ளது.

புறக்கோட்டை மெனிங் சந்தைக்கு பின்புறமாகவுள்ள பெஸ்டியன் மாவத்தை மற்றும் ஒல்கட் மாவத்தையில் கெலேபொல சந்தைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரக்கறி லொறிக்காரர்களிடமிருந்து கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் குறித்த 05 பேரும், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி, கஹவத்த பிரதேசங்களைச் சேர்ந்த 24, 36, 38, 55, 60 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikathir

## சித்திரப்போட்டி

**தினம் ஒரு தலைப்பு**

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

**கொரோனாப் பேரிடர் காலத்தில் வீடுகளில் முடங்கியிருந்த சிறார்களுக்காகக் கடந்த மூன்று மாதங்களாக நாம் தொடர்ந்து நடத்தி வந்த சித்திரப்போட்டி மீண்டும் பாடசாலைகள் இயங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள கட்டத்தில் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது.**

**போட்டிகளில் தொடர்ந்து பங்குபற்றிய சிறார்கள் மற்றும் அவர்களை ஊக்குவித்து ஒத்துழைத்த பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள். வெற்றி பெற்றோர் விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.**

# எதிர்க்கட்சிகளுக்கு ஏற்ற விதத்தில் விதிகளைத் தயாரிக்கிறதாம் ஆணயம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்க்கட்சிகளுக்கு ஏற்ற வகையில் தேர்தல் சட்ட விதிகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் பிரசாரங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றபோதே இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு முற்றுமுழுதாக எதிர்க்கட்சிகளுக்கு சார்பாகச் செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரம், தம்புத்தேகம பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

# இலங்கையின் கடலோரப் பாதுகாப்பு மிகப் பலவீனம் என்கிறது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் எல்லை மற்றும் கடலோரப் பாதுகாப்பு பலவீனமானதாகக் காணப்படுகின்றது என அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் காணப்பட்ட பயங்கரவாதநிலை குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இலங்கையின் எல்லைக்காவல் மற்றும் கடலோர பாதுகாப்பு தொடர்ந்தும் பலவீனமானதாக காணப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளுடனும் ஜப்பானுடனும் இணைந்து கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் எல்லை முகாமைத்துவ நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தனது கடல்சார் எல்லையைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவுடனான தனது இணைப்பை விஸ்தரித்துள்ளது.

அமெரிக்க எல்லை காவல் படையினர் தொடர்ந்தும் இலங்கையின் கரையோர ரோந்துப் படைப்பிரிவினருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் கடல்சார் சட்டங்களை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் கொள்கலன் பாதுகாப்பு முயற்சிகள் மூலம் அமெரிக்காவின் சுங்க திணைக்களம் எல்லைப் பாதுகாப்பிற்குத் தனது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்களம் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையின் விசேட படகுப் படைப் பிரிவு மற்றும் அதிவேகத் தாக்குதல் பிரிவுடன் இணைந்து செயற்படுவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு கோடி ரூபா மதிப்பீட்டில் அச்சுவேலி சந்தை நிர்மாணம்

### வலி. கிழக்கு பிரதேச சபையின் நிதியில்

ஒரு கோடி ரூபா சபை நிதியில் அச்சுவேலி பொதுச் சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப்பணிகள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இடம்பெற்று வருகின்றன என பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

கொரோனா எச்சரிக்கை காரணமாக வரையறுக்கப்பட்டவர்களுடன் அமைதியான முறையில் அச்சுவேலி சந்தைக்கான புதிய கட்டட நிர்மாண வேலைகளை அடிக்கல் வைத்து ஆரம்பித்து வைத்துள்ளோம். பிரதேச சபை உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள் என வரையறுக்கப்பட்டவர்களுடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்கில் 18 ஆயிரம் வரையான விவசாயிகள் வாழ்கின்றனர். அவ் விவசாயிகளுக்கு ஏற்ற சந்தை அமைப்பைத் துரிதமாக சிறந்த முறையில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில் அமையப்பெறும் சந்தைக்கட்டடம் சகலருக்கும் உபயோகமான முறையில் வியாபார முயற்சிகளை முன்னெடுக்கத்தக்க வசதிகளுடன் அமையவுள்ளது.

அச்சுவேலி பொதுச் சந்தை யாழ் மாவட்டத்தில் முக்கியமான சந்தைகளில் ஒன்றாகத் திகழ்கின்ற போதும் சந்தையின் கட்டட உட்கட்டமைப்பு வசதிகள் காலங்கடந்த நிலையில் அபாயகரமான நிலையை அடைந்துள்ளன. அதேவேளை சந்தையில் இடப்பற்றாக்குறையும் காணப்பட்டது. ஏற்கனவே வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தற்காலிக கொட்டகைகளை அமைத்து வியாபார முயற்சிகளுக்கு வசதி ஏற்படுத்தி கொடுத்திருந்த நிலையில் நிரந்தரமான சந்தைக் கட்டட வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்தைக்கட்டட வேலைகளுக்கு ஒத்துழைத்தல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் அடிப்படையில் தற்போது அச்சுவேலி வல்லை வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் சந்தைத் தொழிற்பாடுகளுக்கு பிரதேச சபை வசதி ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

அச்சுவேலி சந்தைக்கட்டுமானப் பணிகள் ஒரு கோடி 22 லட்சத்து 22 ஆயிரம் ரூபா மதிப்பீட்டுத் தொகையில் மூன்று மாத ஒப்பந்த நிபந்தனையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் கடந்த மார்கழி மாதம் கேள்விக்கேரல்கள் இடம்பெற்றன. உரிய கேள்விக்கோரல் நடைமுறைகளின் பிரகாரம் தற்போது ஒப்பந்த தாரர்களிடம் வேலைகள் கையளிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. - என்றார்.

## கிழக்கு மாகாணக் கல்விக் கண்காணிப்புக் குழுவினர் வலயங்கள், தேசிய பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம்





(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் மாகாணமட்ட கண்காணிப்புக்குழுவினர் தமது ஆளுகைக்குட்பட்ட வலயக் கல்விக் காரியாலயங்கள் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு முன்னறிவித்தலின்றி திடீர் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இது வரை மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில் 05 வலயங்கள் இத்திடீர் விஜயத்திற்குள்ளாகி பரிசீலீக்கப்பட்டுள்ளன. மேலும் 11 தேசிய பாடசாலைகளுக்கும் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வி வலயங்களுக்கான திடீர் சோதனை கொரோனா காலகட்டத்திற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் தலைமையிலான குழுவினர் சம்மாந்துறை வலயக் கல்விக் காரியாலயத்திற்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டனர்.

அங்கு நிருவாகப்பகுதி நிதிப்பகுதி மற்றும் கல்வி அபிவிருத்திப் பகுதி என்பன ஆராயப்பட்டு சாதக பாதக விடயங்களைப் பட்டியல்படுத்தினர்.

கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான ஆராயும் அமர்வை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மன்சூர் நடத்தினார்.

சம்மாந்துறை வலயக. கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் சமுகத்தில் பாடரீதியாக ஆராயப்பட்டது. பெறுபேற்றினடிப்படையில் ஆராயப்பட்டு முன்னேற்றம் பற்றி விலாவாரியாக பணிப்பாளர் மன்சூர் கேட்டறிந்தார்.

அது பற்றி அவர் கூறுகையில் -

'சமகாலத்தில் சம்மாந்துறை வலய கல்வி அபிவிருத்தி திருப்தியாக உள்ளது. பாடரீதியாக நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அதேவேளை விஞ்ஞானம், தமிழ் போன்ற முக்கிய பாடங்களில் அணுகுமுறைகள் சற்று மாற்றியமைக்கப்பட





வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.' - என்றார்.

நிருவாகப் பகுதியில் ஓய்வூதியம், சம்பளபடியேற்றம் தொடக்கம் பல விடயங்கள் ஆராயப்பட்டன. இவற்றின் பெறுபேறுகள் திங்களன்று திருமலையில் ஆராயப்படும் என்று அவர் மேலும் சொன்னார்



## ரிஷாத்தை மையமாக வைத்து முஸ்லிம் எதிர்ப்பு வெறித்தனம்

### கடுமையாகச் சாடுகின்றார் மங்கள

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பொதுத்தேர்தல் பிரசாரத்தை மேம்படுத்திக் கொடி நட்டுவதற்காக, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பயன்படுத்தி அதன் ஊடாக வெற்றியைப் பெற்றுக் கொண்ட சூத்திரத்தை மீளப்புதுப்பித்துள்ளது என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன் ஓரங்கமாகவே மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்துவதுடன், ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரை மையமாகக் கொண்ட முஸ்லிம் எதிர்ப்பு வெறியையும் பரப்பி வருகின்றது எனவும் மங்கள சமரவீர கடுமையாகச் சாடியுள்ளார்.

ஆளுந்தரப்பினரின் பொதுத்தேர்தல் பிரசார உத்தி இது என்று சாடியுள்ள மங்கள சமரவீர, இது குறித்துத் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றையும் இட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மலையகத்துக்குத் தலைமை தாங்கத் தயார்!

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் அறிவிப்பு

மலையகத்துக்குத் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்கு மக்கள் எனக்கு அழைப்பு விடுக்கின்றனர். எனவே, மக்களின் ஆணை ஏகோபித்த நிலையில் இருப்பதால், அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராகவே இருக்கின்றேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது உறவுகளின் தீர்மானத்தின் பிரகாரம் மலையகத் தலைமையை ஏற்கத் தயாராகவேயுள்ளேன். எனது உறவுகள் எதுவித காரணங்களுக்காகவும் எவருக்கும் அஞ்சவோ, பின்வாங்கவோ அவசியமில்லை. அரசியல், தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் எனது உறவுகளுக்கு ஏற்படுத்தப்படும் அநீதிகளுக்கெதிராக நீதிமன்றம் வரை சென்று தலைமை தாங்கவும் பின்னிற்க மாட்டேன்.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் துரதிஷ்ட வசமாக எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். இந்தநிலையில் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கான தார்மீகக் கடமை எனக்குண்டென்பதை நான் அறிவேன்.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எம்மை விட்டுப் பிரிந்து விட்டாரென்று, மலையக மக்களை ஆட்டிப் படைக்கலாம், அடிமைகளாக வைத்திருக்கலாம், வஞ்சிக்கலாமென்று எவரும் நினைப்பார்களேயானால் வடிவேல் சுரேஷ் அதனை எதிர்த்து 'தசாவதாரம்' எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எமது மக்களையும், சமூகத்தையும் பாதுகாப்பதற்கு எந்த எல்லை வரையும் நான் செல்வேன் – என்றார்.



# கறுப்புப் பண வர்த்தகர்களை பாதுகாப்பதே அரசின் குறி!

## ஜே.வி.பி. தலைவர் குற்றச்சாட்டு

கறுப்புப் பண வர்த்தகர்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் தேவையாக உள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கின்றார். அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்காக அனுர குமார திஸாநாயக்க நேற்றைய தினம் முன்னிலையாகியிருந்தார்.

அவன்கார்ட் நிறுவனத்தைத் தான்தோன்றித்தனமாகக் கையகப்படுத்தியதால் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, நிஸ்ஸங்க சேனாதிபதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, இந்த முறைப்பாடு தொடர்பில் சாட்சியம் வழங்குவதற்காக கடந்த 23 ஆம் திகதி முன்னாள் அமைச்சர்களான ராஜித்த சேனாரத்ன, அர்ஜுன் ரணதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு நேற்றைய தினம் அழைக்கப்பட்டிருந்தனர்.



இந்த நிலையில் சாட்சியம் வழங்கியதன் பின்னர் நிஸ்ஸங்க சேனாதிபதி மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகளை தோற்கடிப்பதற்காக பணம் ஒதுக்கியுள்ளார் எனக் கூறப்படும் விடயம் தொடர்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அனுர குமார திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

# ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றி பொதுத்தேர்தலில் பூரணமடையவேண்டும்

## மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றி நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியிலேயே முழுமை பெற வேண்டும். ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி நாடாளுமன்றத்தில் நிலையான அரசை அமைக்க வேண்டும் என்பதில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

– இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இன்று ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் பல பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாக அமைய வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தம், தேர்தல் திருத்த முறைமை ஆகிய விடயங்களுக்கு உறுதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசை அமைத்தால் மாத்திரமே இலக்கை அடைய முடியும்.

நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனித்து நிலையான அரசை அமைக்க வேண்டும். பிறிதொரு கட்சியின் ஆதரவுடன் தேசிய அரசைத் தோற்றுவித்தால் நல்லாட்சி அரசின் முரண்பாடுகளே மிகுதியாக அமையும். எனவே, ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அரசை அமைக்க வேண்டும்.

நல்லாட்சி அரசில் ஜனாதிபதி ஒரு கட்சி சார்ந்தவராகவும், பிரதமர் பிறிதொரு கட்சி சார்ந்தவராகவும் இருந்தமையால் அரசின் கொள்கை முரண்பட்டதாக இருந்தது.

இதனால் முழு அரசாங்க செயலொழுங்கும் பலவீனமடைந்தன. ஆகவே, இம்முறை ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி நாடாளுமன்றத்தில் நிலையான அரசை அமைக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஜனாதிபதி அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகவே செயற்படுகின்றார். அரசியல் கட்சிகளை இலக்காகக் கொண்டு அவர் செயற்படவில்லை.

தமிழ்–முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை விடுத்து யதார்த்த நிலைமையைப் புரிந்துகொண்டு சிறந்த அரசை உருவாக்க ஒன்றுபட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக உள்ளது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பலமான அரசைத் தோற்றுவிக்கும். தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணியின் 'மொட்டு' சின்னத்தில் போட்டியிடுகின்றார்கள். நாடாளுமன்றத்தில் அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்தவப்படுத்தும் அரசு தோற்றம் பெற்றால் மாத்திரமே தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும் – என்றார்.

# வவுனியாவுக்கு வந்த 100 பேருக்கு பி. சி.ஆர்.

கொழும்பு, ஜூன் 27

வவுனியா பெரியகாடு, பம்பைமடு, வேலங்குளம் ஆகிய இராணுவ முகாம்களில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் இன்று மேற்கொள்ளப்பட்டன.

இன்று 100 பேருக்கு பீ.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

# திருட்டுத் தொலைபேசியை வாங்கிய குடும்பப் பெண் கைதாகிப் பிணையில்

(சந்திரன் குமணன்)

வீடொன்றில் திருடப்பட்ட தொலைபேசியை வாங்கிப் பயன்படுத்தி வந்த குடும்பப் பெண்கள் இருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா சரீர பிணை வழங்கி சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட காரைதீவு பகுதியில் 2020.02.20 திகதி அன்று வீடொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் நகை கைத்தொலைபேசி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் என்பன திருடப்பட்டன என முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத் தின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான குழுவினர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் சந்தேக நபர்களினால் அந்த வீட்டில் அபகரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடந்த மாதம் ஒலுவில் வயல்பகுதி ஒன்றில் சந்தேக நபர்களினால் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை நீதிமன்றம் ஊடாக உரிமையாளரிடம் பாரப்படுத்தப்பட்டது.

மேலும் களவாடப்பட்டிருந்த கையடக்க தொலைபேசியின் தரவுகளை உரிய முறையில் பெற்று முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி வந்த அட்டாளைச்சேனை பகுதியை சேர்ந்த 23 வயதுடைய பெண் கைதானார். கைதான பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் பிரகாரம் அவர் பயன்படுத்தி வந்த கைத்தொலைபேசி மீட்கப்பட்டது.

அத்துடன் பெண்ணிடம் இருந்து மீட்கப்பட்ட கைத்தொலைபேசியை விற்பனை செய்தவர் எனக் கூறப்படும் நபர் தற்போது வேறொரு வழக்கில் கைதாகி சிறையில் உள்ளார் எனவும் அவர் போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த நிலையில் கைதாகியுள்ளமை பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அந்தத் தொலைபேசியைப் பயன்படுத்திய குடும்ப பெண் மற்றும் அத்தொலைபேசியை தற்போது சிறையிலுள்ள தனது கணவனிடம் இருந்து கொள்வனவு செய்ய உதவிய மற்றுமொரு குடும்ப பெண் உள்ளிட்ட சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இரு குடும்பப்பெண்கள் இருவரையும் தலா 1 லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்க சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி உத்தரவிட்டார்.

இதில் கைத்தொலைபேசியை கொள்வனவு செய்ய உதவி ஒத்தாசை செய்து கைதாகிய குடும்ப பெண் தற்போது சிறையில் உள்ள தனது கணவனிற்கு உணவு பொதியில் போதைப்பொருளை மறைத்துக் கடத்தி சென்று வழங்கிய வழக்கில் குற்றச்சாட்டிற்கு உள்ளாகி தண்டப்பணம் விதிக்கப்பட்டவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2020 இல் வெளியிடப்பெற்றது.